©
GOVERNMENT OF TAMIL NADU
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs.1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 11] CHENNAI, WEDNESDAY, MARCH 19, 2014
Panguni 5, Vijaya, Thiruvalluvar Aandu–2045

# Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

## NOTIFICATIONS BY GOVERNMENT

## CONTENTS

| | Pages |
|---|---|
| **வருவாய்த் துறை** | |
| ஆட்சி எல்லை—திருவள்ளூர் மாவட்டம்—அம்பத்தூர் வட்டத்தை பிரித்து புதிய மதுரவாயல் வட்டம் உருவாக்குதல் – திருத்தம் வெளியிடப்படுகிறது .. | 10-11 |
| INDIAN RAILWAYS | |
| Energisation of Overhead Equipment in Coimbatore North Junction-Mettupalaiyam Section of Southern Railway at 25kV ac 50 cycle Single Phase Supply System .. .. .. .. | 11-12 |

## NOTIFICATIONS BY GOVERNMENT

**வருவாய்த் துறை**

*தலைமைச் செயலகம், 2014 மார்ச் 19.*

No. II(1)/REV/6/2014.

[ஆட்சி எல்லை—திருவள்ளூர் மாவட்டம்—அம்பத்தூர் வட்டத்தை பிரித்து புதிய மதுரவாயல் வட்டம் உருவாக்கப்பட்டது—ஒரு வட்டாட்சியர் பணியிடம் புதியதாக தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது—அரசாணையில் திருத்தம் வெளியிடப்படுகிறது.]

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:—

*[அரசாணை (நிலை) எண் 90, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 25 பிப்ரவரி 2014.]*

**படிக்கவும்:—**

1. அரசாணை (நிலை) எண் 464, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, நாள்: 20—11—2013.
2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கடித எண் பணி 6(4)/56393/2012, நாள்: 24—12—2013.
3. மாவட்ட ஆட்சியர் திருவள்ளூர் மாவட்டம், கடித எண் ந.க. எண் 17578/2011/அ1, நாள்: 20—01—2014.

**ஆணை எண் 90, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 2014 பிப்ரவரி 25.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டத்தைப் பிரித்து புதியதாக மதுரவாயல் வட்டம் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது. இவ்வரசாணையில் அம்பத்தூர் வட்டத்தில் இரண்டு வட்டாட்சியர் பணியிடங்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டதால், புதியதாக உருவாக்கப்படும் மதுரவாயல் வட்டத்திற்கு பொதுப் பிரிவில் உள்ள இரண்டு வட்டாட்சியர் பணியிடங்களில் ஒரு வட்டாட்சியர் பணியிடத்தை மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்ப அரசாணை வெளியிடப்பட்டது.

2. இது தொடர்பாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து மதுரவாயல் வட்டம் புதியதாக உருவாக்கப்பட்டது தொடர்பாக, அம்பத்தூர் வட்டத்தில் வருவாய் வட்டாட்சியர் பணியிடம் ஒன்றும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் தனிவட்டாட்சியர் பணியிடம் ஒன்றும் ஆக மொத்தம் இரண்டு வட்டாட்சியர் பணியிடங்கள் மட்டுமே உள்ளன எனவும், அதன் அடிப்படையிலேயே புதியதாக உருவாக்கப்படும் மதுரவாயல் வட்டத்திற்கு இரண்டு வட்டாட்சியர் பணியிடங்கள் [வட்டாட்சியர்—1, தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)—1] தேவை எனவும் தெரிவித்துள்ளார். ஆனால் அம்பத்தூர் வட்டத்தில் இரண்டு வட்டாட்சியர் பணியிடங்கள் மட்டுமே உள்ள நிலையில், அம்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து ஒரு வட்டாட்சியர் பணியிடத்தை புதியதாக தோற்றுவிக்கப்படும் மதுரவாயல் வட்டத்திற்கு மறுபரவலமர்த்தல் மூலம் பணியமர்த்தப்பட்டால் அம்பத்தூர் வட்டத்தில் ஒரு வட்டாட்சியர் பணியிடம் மட்டுமே இருக்கும் நிலை ஏற்படும் என்றும், எனவே இந்நிலையில் தனிவட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மூலம் நிறைவேற்றப்பட்டு வரும் அரசின் நலத்திட்டங்களான முதியோர் உதவித் தொகை மற்றும் பல நலத்திட்டங்கள் உரிய காலத்தில் செயல்படுத்த இயலாத நிலை ஏற்படும் எனவும், எனவே ஒரு வட்டத்திற்கு வட்டாட்சியர் மற்றும் தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ஆகிய இரண்டு வட்டாட்சியர் பணியிடங்கள் அவசியமாகிறது என்றும், எனவே அம்பத்தூர் வட்டத்திற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள இரண்டு வட்டாட்சியர் பணியிடங்களை (கூடுதல் வட்டாட்சியர் பணியிடம் ஏதுமில்லாத காரணத்தினால்) அவ்வட்டத்திலேயே நிருத்திக்கொண்டு புதியதாக உருவாக்கப்பட்ட மதுரவாயல் வட்டத்திற்கு தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) உருவாக்கியது போல அம்பத்தூர் வட்டத்திலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் வட்டாட்சியர் பணியிடத்தினை மதுரவாயல் வட்டத்திற்கு மாற்றியதை ரத்து செய்து, மேலும் ஒரு நிரந்தர வட்டாட்சியர் பணியிடத்தை உருவாக்கி அரசாணை வெளியிடுமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கருத்துருவினை ஏற்கனவே அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. மேற்கூறிய சூழ்நிலையில், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையினை ஏற்று, அம்பத்தூர் வட்டத்திலிருந்து ஒரு வட்டாட்சியர் பணியிடத்தை மதுரவாயல் வட்டத்திற்கு மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்ப மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டதை ரத்து செய்தும், அம்பத்தூர் வட்டத்திலுள்ள இரண்டு வட்டாட்சியர் பணியிடங்களை அவ்வட்டத்திலேயே இருத்திக்கொள்ளவும், புதியதாக உருவாக்கப்பட்ட மதுரவாயல் வட்டத்திற்கு புதியதாக ஒரு நிரந்தர வட்டாட்சியர் பணியிடம் உருவாக்கி அரசு ஆணையிடுகிறது. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணைக்கு கீழ்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

**திருத்தம்**

அரசாணை (நிலை) எண் 464, வருவாய்த் துறை, நாள் 20—11—2013—ல் பத்தி 4(iv)—ல் காணும் அட்டவணையில் பொதுப் பிரிவு தலைப்பின்கீழ் வ.எண் (1)—ல் கீழ்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது:—

புதியதாக உருவாக்கப்படும் மதுரவாயல் வட்டத்திற்கு கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு மொத்தம் **37** பணியிடங்களும், இதில் **7** பணியிடங்கள் மறுபரவலமர்த்தல் மூலமும் **30** பணியிடங்கள் புதியதாகவும் உருவாக்கப்படுகிறது.

| *வ. எண்* | *பணியிடத்தின் பெயர்* | *As per Standard Pattern* | *மறுபரவல மர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டியது* | *புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள்.* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| | **பொதுப் பிரிவு** | | | |
| 1. | வட்டாட்சியர் | 1 | 0 | 1 |

(ஊதியம் விகிதம் ரூ. **9300–34800** + தர ஊதியம் ரூ.**5100/-+** சிறப்புப் படி ரூ.**1000/–**)

4. இது தொடர்பாக தக்க நடவடிக்கை எடுக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**5.** இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் **11093**/CMPC/**2014**, நாள் **25–02–2014**–இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ககன்தீப் சிங் பேடி,**
*அரசுச் செயலாளர்.*

INDIAN RAILWAYS

TAMIL DEVELOPMENT AND INFORMATION DEPARTMENT

**Energisation of Overhead Equipment in Coimbatore North Junction-Mettupalaiyam Section of Southern Railway at 25kV ac 50 cycle Single Phase Supply System.**

*[Forwarded under Letter No. 998/S&P2.2/2014-1, Tamil Development and Information (S&PII 2), 22nd January 2014.]*

[Letter No. ETR/252/RE/2449/EIG, 16th January 2014.]

*Proforma 10-01*

PUBLIC NOTIFICATION

No. II(1)/TDRE/7/2014.

Notice is hereby given to all users of Railway lines and premises situated on the completed section of the Coimbatore North Jn - Mettupalaiyam section of the Southern Railway that the 25,000 Volt 50Hz., ac. Overhead Traction wires will be energized on or after 31-03-2014. On and from the same date the Overhead Traction line shall be treated as 'LIVE' at all t imes and no unauthorized person shall approach or work in the proximity of the said overhead lines.

Egmore, Chennai. 600 008,
16th January 2014.

M. PRABHAKARAN,
*For Chief Project Manager,*
*Railway Electrification.*

*[Forwarded under Letter No. 998/S&P2.2/2014-1, Tamil Development and Information (S&PII-2), 22nd January 2014.]*

[Letter No. ETR/252/RE.2449/EIG, 16th January 2014.]

**Introduction of ac 25kV Traction**

*Proforma 10-02*

"WARNING TO ROAD USERS"

No. II(1)/TDRE/8/2014.

It is notified for information of the public that in connection with introduction of 25kV ac electric traction over the Coimbatore North Jn - Mettupalaiyam section of Southern Railway on and from 31-03-2014 height gauges have been erected at all the level crossings with clear height of 4.67m, above road level with a view to prevent loads of excessive height from coming into contact or dangerous proximity to "LIVE" Traction Wires.

Public are hereby, notified to observe the height specified above for the purpose of loading Vehicles and to see that the loads carried in road vehicles do not infringe the height gauges under any circumstances.

The Dangers of a load of excessive height are as follows:—

(i) Danger to the height gauge and consequent obstruction to the Road as well as the Railway line.

(ii) Danger to the materials or equipments carried or the vehicle itself.

(iii) Danger of fire and risk of life due to contact with or dangerous proximity to the conductor.

M. PRABHAKARAN,
For *Chief Project Manager,*
*Railway Electrification.*

Egmore, Chennai-600 008,
16th January 2014.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU